Registered as a News Paper

பக்கங்கள் 06

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 08 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | மாசி 05 | [16 - 02 - 1998] | செவ்வாய்க்கிழமை | ஓசை 864

## கிராமசேவையாளர் பதவி 100பேருக்கு கிடைக்கும்

கிராம சேவகர் போட்டிப்பரீட்சையில் சித்தி எய்தியோரில் 100 பேருக்கு நேர்முகத்தேர்வின் மூலம் நியமனம் வழங்கப்படவுள்ளது. இது பற்றி மேலும் தெரியவருவதாவது போட்டிப்பரீட்சைமூலம் கிராம சேவை உத்தியோகத்தருக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக கடந்த வருடம் நடைபெற்ற பரீட்சையில் சித்தி எய்தியோருக்கு நேர்முகத் தேர்வொன்றை நடாத்தி அதன் மூலம் முதற்கட்டமாக 100 பேருக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது. இந் நேர்முகத்தேர்வை நடாத்துவதற் (6ஆம் பக்கம்பார்க்க)

# கிட்டு ஓர் அற்புத இலட்சியவாதி; தலைவர் பிரபாகரன் புகழஞ்சலி





(யாழ்ப்பாணம்)

'அவனுள் ஓர் அபூர்வம் இருந்ததை நான் ஆரம்பத்திலிருந்தே கண்டு கொண்டேன். அது அவனது அழகான ஆளுமையாக வளர்ந்தது. ஒரு சுதந்திர வீரனுக்குரிய அனைத்துச் சிறப்பியல்புகளும் அவனிடமிருந்தன. அதனால் அவன் ஓர் அற்புதமான இலட்சியவாதியாக வாழ்ந்தான்; போராடினான்; அனைத்து மக்களது இதயங்களையும் கவர்ந்தான். போர்களத்தில் வீரனாகவும், பொதுமக்களின் தோழனாகவும், எங்கும் எல்லாவற்றிலும் எல்லோரிடமும் அவனது ஆளுமையின் வீச்சு நிறைந்திருந்தது''

இவ்வாறு மூத்த தளபதி கேணல் கிட்டுவிற்கு வீர அஞ்சலி செலுத்தி தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்க பட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. ''மனதின் ஆழத்து உள்ளுணர்வுகளை வார்த்தைகளில் சித்திரிப்பது கடினம். அதுவும் ஆன்மாவை உலுப்பிவிடும் ஓர் உணர்வுப் பூகம்பத்தை மனித மொழியில் விபரிக்கமுடியாது எனது அன்புத் தம்பி கிட்டுவின் இழப்பும் அப்படித்தான். அவனது மறைவு எனது ஆன்மாவை பிழிந்த ஒரு சோக நிகழ்வு. அதனைச் சொற்களால் வார்த்துவிட முடியாது. ( 6 ஆம் பக்கம் பார்க்க )

## ஐந்து தமிழ் இளைஞர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

தமிழர்களான ஐந்து இளைஞர்களை அவிசாவளைபொலிசார் புவாக்பிட்டிய எலிண்டன் தோட்டத்தில் வைத்து கைது செய்துள்ளனர். இவ் இளைஞர்கள் மட்டக்களப்பு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளிலிருந்து வாரந்தோறும் இப்பகுதித் தோட்டங்களுக்கு வந்து இயக்கப் பிரசார வேலைகளில் ஈடுபட்டு வந்தவர்கள் என்று பொலிசார் கூறியுள்ளனர். இவர்கள் மீதான விசாரணைகள்தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதாகவும், குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி மந்துசேன மேலும் கூறியுள்ளார்.

# கிளாலி கடற்பரப்பின் மீது விமானக் குண்டு வீச்சு

## கடற்படை படகுகள் மீது புலிகள் இருமுனை தாக்கு

### படை வட்டாரங்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

கிளாலியில் கடற்படைப் படகுமீது விடுதலைப் புலிகள் இருமுனைத் தாக்குதலை மேற்கொண்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கிளாலி ஏரிப்பகுதியில் நாகதீவம் துறை என்ற இடத்தில் உள்ள கடற்படைப் பிரிவு மீது புலிகள் தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வீரச்சாவு

### வீர வேங்கை ஈழவன்

சென்ற 11ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு திருமலை மூதூர் கொட்டியாரக் கட்டுச்சந்தியால் சென்ற விடுதலைப்புலிகள் போராளிகள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரவேங்கை ஈழவன் (காளியப்பு சிவராசா 9 ஆம் வட்டாரம், பாட்டாளிபுரம், மூதூர்) வீரச்சாவடைந்தார்

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## கரையோரத்தில் ஹெலிதாக்குதல்

(யாழ்ப்பாணம்)

கிளாலிக் கடற்பரப்பில் சிறிலங்கா அரசிற்குச் சொந்தமான அவ்ரோ விமானமொன்று நேற்று மாலை சுமார் அரைமணி நேரமாக குண்டு வீச்சு தாக்குதலை நடத்தியது. இதேவேளை உலங்கு வானூர்தி ஒன்று கிளாலி கரையோரப் பகுதியில் தாழப்பறந்து கலிபர் தாக்குதலையும் நடத்தியது.

இச் சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் இடம் பெற்றது கிளாலி கடற்பரப்பில் அவ்ரோ விமானம் ஒன்று குண்டு வீச்சுத்தாக்குதல்களை நிகழ்த்திகொண்டிருந்த போது கரையோரத்தில் நின்று கொண்டிருந்த பொது மக்கள் மீதே உலங்கு வானூர்தி கலிபர் தாக்குதலை நடாத்தியது. இதனால் இப்பகுதியில் நின்ற மக்கள் சிதறி ஓடி பாதுகாப்பைத் தேடிக் கொண்டனர்.

## செஞ்சிலுவை பிரதிநிதி இன்று யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவை சங்... திற்கு பொறுப்பாளராகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது

## பத்திரிகையாளர்மீது அச்சுறுத்தலைநீக்குக

# கிளாலி கடற்பரப்பின் மீது விமானக் குண்டு வீச்சு

## கரையோரத்தில் ஹெலிதாக்குதல்

(யாழ்ப்பாணம்)

கிளாலிக் கடற்பரப்பில் சிறிலங்கா அரசிற்குச் சொந்தமான அவ்ரோ விமானமொன்று நேற்று மாலை சுமார் அரைமணி நேரமாக குண்டு வீச்சு தாக்குதலை நடத்தியது. இதேவேளை உலங்கு வானூர்தி ஒன்று கிளாலி கரையோரப் பகுதியில் தாழப்பறந்து கலிபர் தாக்குதலையும் நடத்தியது.

இச் சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் இடம் பெற்றது கிளாலி கடற்பரப்பில் அவ்ரோ விமானம் ஒன்று குண்டு வீச்சுத்தாக்குதல்களை நிகழ்த்திக்கொண்டிருந்த போது கரையோரத்தில் நின்று கொண்டிருந்த பொது மக்கள் மீதே உலங்கு வானூர்தி கலிபர் தாக்குதலை நடாத்தியது. இதனால் இப்பகுதியில் நின்ற மக்கள் சிதறி ஓடி பாதுகாப்பைத் தேடிக் கொண்டனர்.

## ஐந்து தமிழ் இளைஞர் பொலிசாரால் கைது

[கொழும்பு]

தமிழர்களான ஐந்து இளைஞர்களை அவிசாவளை பொலிசார் புவாக்பிட்டிய எலின்டன் தோட்டத்தில் வைத்து கைது செய்துள்ளனர். இவ் இளைஞர்கள் மட்டக்களப்பு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளிலிருந்து வாரந்தோறும் இப்பகுதித் தோட்டங்களுக்கு வந்து இயக்கப் பிரசார வேலைகளில் ஈடுபட்டு வந்தவர்கள் என்று பொலிசார் கூறியுள்ளனர். இவர்கள் மீதான விசாரணைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதாகவும், குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி நந்தசேன மேலும் கூறியுள்ளார்.

## கடற்படை படகுகள் மீது புலிகள் இருமுனை தாக்கு

### படை வட்டாரங்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

கிளாலியில் கடற்படைப் படகுமீது விடுதலைப் புலிகள் இருமுனைத் தாக்குதலை மேற்கொண்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கிளாலி ஏரிப்பகுதியில் நாகதீவம் துறை என்ற இடத்தில் உள்ள கடற்படைப் பிரிவு மீது புலிகள் தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## செஞ்சிலுவை பிரதிநிதி இன்று யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் இலங்கை பிரிவின் வெளிக்கள உத்தியோகத்தர் திரு. லூக் இன்று காலை யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

இவர் இலங்கையின் கடல், தரை மார்க்க போக்குவரத்திற்கு பொறுப்பாளராகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது. இவர் இங்கு தங்கி இருக்கும் போது இங்குள்ள போக்குவரத்து நிலைமை தொடர்பாக நேரடியாக அவதானிப்பார் என தெரியவருகிறது.

## வடபகுதிக்கு 5000 மெ.தொன் உணவுப் பொருள் வருமாம்

[கொழும்பு]

வடமாநிலத்திற்கு 5000 மெற்றிக் தொன் நிவாரணப் பொருள்களை அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

குமாரி எனும் கப்பலில் 3200 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் அனுப்பிவைக்கப்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## வீரச்சாவு

### வீர வேங்கை ஈழவன்

சென்ற 11 ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு திருமலை மூதூர் கொட்டடிவான் கட்டுச்சந்தியால் சென்ற விடுதலைப்புலிகள் போராளிகள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து நடத்தியதில் வீரவேங்கை ஈழவன் (காளியப்பு சிவராசா 9 ஆம் வட்டாரம், பாட்டாளிபுரம், மூதூர்) வீரச்சாவடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## 7-வது ஆண்டில் நிதர்சனம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தொலைக்காட்சி அமைப்பான நிதர்சனம் நிறுவனம் நேற்றுடன் தனது ஆறாவது ஆண்டைப் பூர்த்திசெய்கிறது. சிறிலங்கா அரசின் விசமத்தனமான பிரசாரங்களினால் மக்கள் விடுதலைப் போராட்டத்தில் இருந்து அன்னியப்பட்டுப் போகாமல் இருப்பதற்காக உண்மையான செய்திகள்

[ 6 ஆம் பக்கம் பார்க்க ]

## பத்திரிகையாளர்மீது அச்சுறுத்தலை நீக்குக

## அமெரிக்க பத்திரிகையாளர் பிரேமாவிற்கு கடிதம்

(மணிலா)

சிறிலங்காவில் பத்திரிகையாளருக்கும் வெளியீட்டாளருக்கும் ஏற்பட்டுள்ள ஆபத்தான நிலைமையை நீக்க உதவுமாறு அமெரிக்க நியூயோர்க் நகரிலுள்ள 'பத்திரிகையாளன் நலன் காக்கும் குழு' சிறிலங்கா ஜனாதிபதியை கேட்டுக்கொண்டுள்ளது.

இந்த குழுவினரால் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவிற்கு எழுதப்பட்டுள்ள கடிதத்தில் மேற்படி விடயம் குறிப்பிடப்பட்டு இருப்பதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன. பத்தி

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## அடிப்படை உரிமை மீறலில் ஆறு பொலிஸ் அதிகாரிகள்

### - நீதிமன்றத்தில் வழக்கு

(கொழும்பு)

தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன ஊழியர் ஒருவர் செய்த முறைப்பாட்டையடுத்து பொலிஸ் அதிகாரிகள் ஆறு பேருக்கு எதிராக அடிப்படை உரிமைகளை மீறியதான குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது

இப் புகார் தொடர்பான புனராய்வு அறிக்கைகள் மேல் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

எம்பிலிப்பிட்டிய பொலிசார் சட்டத்திற்கு முரணான வகையில் தம்மைக் கைது செய்து தடுத்து வைத்ததாகவும், சித்திரவதை செய்ததாகவும் கூறி தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன ஊழியரான விஜயமுனி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுறவு ஊழியருக்கு அபாயப் படி கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

1989 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் யூன் மாதம் வரையான ஆறுமாத காலப்பகுதியில் கடமையாற்றிய நெடுந்தீவு, நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு நெருக்கடியான காலப்பகுதியில் கடமையாற்றியமைக்காக வழங்கப்படும் அபாயப்படிக் கொடுப்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மூதூர் கிராமங்கள் அடிக்கடி சுற்றிவளைப்பு

### பொதுமக்கள் பலர் கைது

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மூதூரிலுள்ள கிராமங்கள் அடிக்கடி இராணுவச் சுற்றிவளைப்புக்கு உள்ளாகி வருகின்றன. இச் சுற்றிவளைப்புகளின் போது அப்பாவிப் பொதுமக்கள் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டும் வருகின்றனர்.

பச்சைநூரில் முகாமிட்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் கடந்த 8 ஆம் திகதி மணல்சேனை என்னும் கிராமத்தைச் சுற்றிவளைத்து அவ்விடத்தைச் சேர்ந்த 2 பொது மக்களைக் கைது செய்துள்ளனர்.

கந்தசாமி துரைராசா (வயது 40, திருமணமானவர்) பொன்னுலிங்கம் மதிமுகன் (வயது 19, மாணவன்) ஆகிய இருவருமே படையினரால் கைது செய்யப்பட்டவர்களாவர்.

மேலும் கடந்த 11 ஆம் திகதி இதேயிடத்தைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் அப்பகுதியைச் சேர்ந்த ஆயிரம்குட்டி (வயது 19) என்பவரை கைது செய்துள்ளனர்.

## வரி விளம்பரம்

### 'நியூ விகரேஸ்'

ரெலிவிசன் வீடியோ டெக், றேடியோ, ரேப்றெகோடர், எலெக்ரோனிக் கமறா, கைக்கடிகாரங்கள் மற்றும் மின்சார வேலைகள் எமெஜன்சி லைற் பற்றறிகள் திருத்தி சார்ச் செய்தல், பாடல்கள் பதிவு செய்தல், வீடியோ படப்பிடிப்புகள் யாவும் நிபுணர்களால் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும். நியூ விகரேஸ்' எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ் மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (4060)

### 200 நாடகங்கள்

O/L தமிழ்மொழி பாடத்திட்டத்தில் வானொலி நாடகமும் உள்ளது. அதைக் கற்பதற்கு பயன்படக்கூடிய ஒரேயொரு நூல்—200க்கும் அதிகமான நாடகங்கள் எழுதிய அராலியூர் ந சுந்தரம்பிள்ளையின் முதலாம்பிள்ளை. 30/-. (4053

### மீரா பிரசுரங்கள்

இளைஞர்களின் மனதைக் கெடுக்காமல் அவர்களைச் சிந்திக்க வைக்கும் நாவல்கள்! விடியலைத் தேடி. அக்கினி. இல்லத்தில் சில உள்ளங்கள், மீண்டும் புதிதாய்ப் பிறப்போம், சுவடுகள்: விண்ணில் அலை விடிவெள்ளி. (4260)

## ஏற்பு ஊசி ஏற்றுவது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்திய சாலை வெளிநோயாளர் பகுதியில் ஏற்புவலி தடுப்பு ஊசி நோயாளர்களிற்குப் போடுவது மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ் போதனா வைத்தியசாலை மருந்துக் களஞ்சியப் பகுதியில் இருந்து முன்பு தினமும் ஐம்பது நோயாளர்களிற்கு அளவான ஊசிமருந்து விநியோகிக்கப்பட்டது. தற்பொழுதினமும்பத்துநோயாளர்களிற்கு அளவான ஊசி மருந்தே விநியோகிக்கப்படுகிறதாம். இதனால் பெரும் தொகையான நோயாளர்கள் தினமும் ஊசி போடாமல் திரும்பிச் செல்கின்றார்கள். இவர்களில் அனேக நோயாளர்கள் வெளியிடங்களைச் சேர்ந்தவராவார்கள். [88]

## ஓய்வூதியக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுவோர்களுக்கான பெப்ரவரி மாதக் கொடுப்பனவு இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் அடைக்கலமாதா தேவாலயத்திற்கு அருகில் உள்ள மேற்படி சங்க கிராமிய வங்கியில் பணமாக வழங்கப்படும் என அதன் முகாமையாளர் அறிவித்துள்ளார். (22)

கடற்புலிகளுக்கு எதிராக

# சிறிலங்காவும் இந்தியாவும் இணைந்துசெயற்படுகிறதாம்

(கொழும்பு)

சிறிலங்காவும் இந்தியாவும் இணைந்து கடற்பரப்பில் கடற்புலிகளுக்கு எதிராக மும்முனைத் தாக்குதல் நடாத்திவருவதாக கூட்டுப்படைத் தலைமையகம் செய்தி வெளியிட்டுள்ளது.

வேகமாகச்செல்கின்ற பீரங்கிப்படகுகள் இந்தியக் கரையோரக் கப்பல்களுடன் இணைந்து இருபத்திநான்கு மணிநேரமும் ரோந்து புரிகின்றன.

அரபுக்கடலில் இருந்து அந்தமான் நிக்கோபார் தீவு உட்பட்ட பிரதேசங்களில் இந்தியக்கப்பல்கள் திரிகின்றன. இன்டர்போலின் உதவியுடன் விடுதலைப் புலிகள் பயன்படுத்துகின்ற கப்பல்கள் சர்வதேச நீர்ப்பரப்பில் வருகின்ற போது கண்டுபிடிக்கக் கூடியதாக இருக்கிறதாம்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு

## மகளிர் அபிவிருத்தி நிலையம்

யாழ்/கல்வித் திணைக்கள

மனைப்பொருளியற் பிரிவினருடன்

இணைந்து நடத்தும்

ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

## முக்கிய அறிவித்தல்

சகல அங்கத்தவர்களின் கவனத்திற்கு,

1. கடந்தகால எண்பார்வை அறிக்கையையும், கூ. அ. உ. ஆணையாளர் காரியாலயத்தில் இருந்து பெறப்பட்ட வாக்காளர் பட்டியலையும் ஆதாரமாகக் கொண்டு புதிய அங்கத்தவர் பட்டியல்கள் கிளை ரீதியாக தயாரிக்கப்பட்டு தலைமைக் காரியாலயத்திலும் நிவாரணக் கிளைகளிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

2. அங்கத்தவர்கள் காட்சிப்படுத்தப்பட்ட பட்டியலில் உள்ள தமது அங்கத்துவத்தையும் பங்குப்பணத் தொகையையும் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

3. காட்சிப்படுத்தப்பட்ட பட்டியலில் தமது பெயர் காணப்படாதவிடத்து அல்லது தவறான விபரங்களுடன் பதியப்பட்டிருந்தால் அல்லது பங்குத் தொகையில் வித்தியாசம் இருக்குமிடத்து தகுந்த ஆதாரங்களுடன் ''செயலாளர், ஊர்காவற்றுறை ப நோ கூ. சங்கம், பி. எஸ். சேவிஸ் நிலையம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்'' என்ற விலாசத்திற்கு 28 - 02 - 93 க்கு முன்னர் எழுத்து மூலமாக தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

4. பங்குப்பணம் நிலுவையாக உள்ளவர்கள் அல்லது புதிய அங்கத்துவம் பெற விரும்புவோர் தலைமைக் காரியாலயத்தில் பணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். இது சம்பந்தமாக மேலதிக விபரங்கள் தேவைப்படும்போது தயவு செய்து செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

5. இறந்த அங்கத்தவர்களின் பின் உரித்தாளர்கள் தம்மை ஆதாரத்துடன் அத்தாட்சிப்படுத்தும் இடத்து அவரது பங்குப்பணம் மாற்றம் செய்யப்படும்.

6. அங்கத்தவர் இடாப்பு 31 - 03 - 93 இல் மூடப்பட்டு அத்திகதியில் உள்ளவாறான வாக்காளர் பட்டியல்கள் கிளைரீதியாக தயாரிக்கப்படும் எனவும், இதனடிப்படையில் கிளைக்குழுத் தேர்தல்கள் நடாத்தப்படவுள்ளன என்பதையும் தெரிவிக்கின்றோம். இவ்விடயத்தில் சகல அங்கத்தவர்களையும் பூரண ஒத்துழைப்பினைத் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

| நிவாரணக் கிளையின் பெயர் | அங்கத்துவர் பட்டியல் தயாரிக்கப்பட்ட கிளைகளின் பெயரும் முகவரியும் |
|---|---|
| கிளை 1. பண்ணை வீதி, யாழ்ப்பாணம். | கிளை 1— ஊர்காவற்றுறை<br>கிளை 2— பருத்தியடைப்பு<br>கிளை 3— கரம்பொன்<br>கிளை 5— அம்பலப்புலம்<br>கிளை13— மெலிஞ்சிமுனை |
| கிளை 2. பண்ணை வீதி, யாழ்ப்பாணம். | கிளை 4— பாலக்காடு<br>கிளை6 —நாரந்தனைவடக்கு<br>கிளை9—புளியங்கூடல்வடக்கு<br>கிளை12 — சரவணைமேற்கு |

## விசேட அறிவித்தல்

## சர்வதேச மகளிர் தினவிழா 1993 மார்ச் 8

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் மாவட்ட மகளிர் குழு 1993-ம் ஆண்டு சர்வதேச மகளிர் விழாவினை யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடாத்த உள்ளது. அதனையொட்டி.

அ. 1993 02-12-ம் திகதிய ஈழநாதத்திலும்

ஆ. 1993-02-11-ம் திகதியிட்டு அங்கத்துவ சங்கங்களுக்கும் அறிவித்த விளம்பரங்கள் தொடர்பாக,

1. பாடசாலை மாணவர்களுக்கான பேச்சு, கட்டுரை போட்டி

அ. இப்போட்டிகளில் பங்குபெற விரும்பும் மாணவர்கள் அதிபர் ஊடாக விண்ணப்பங்களை 1993-2-20 சனிக்கிழமை பி. ப. 1-00 மணிக்கு முன்னதாக அனுப்புதல் வேண்டும்.

ஆ. போட்டிகள் 1993-02-21 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு போதனா வைத்தியசாலை முன்பாக செல்லும் மணிக்கூட்டு வீதி, இல. 14 இல் அமைந்துள்ள யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவு சபை மண்டபத்தில் நடைபெறும்,

தனிப்பட்ட அழைப்புக்கள் அனுப்பப்பட மாட்டாது.

2. யா. மா. கூ. சபையில் அங்கத்துவம் பெற்றுள்ள சங்கங்களின் மகளிர் அங்கத்தவருக்கான போட்டிகள்

அ. பேச்சு, கட்டுரை, உள்ளூர் உற்பத்தி உணவு தயாரித்தல், கோலம் ஆகிய போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி: 1993 - 02 - 24

ஆ. போட்டிகள் மார்ச் மாதம் 6-ம், 7-ம் திகதிகளில் நடாத்தப்படும். அது பற்றிய விபரங்கள் சங்கங்களுக்கு பின்னர் அறிவிக்கப்படும்.

செயலாளர்.

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை,
இல. 14, மணிக்கூட்டுவீதி,
யாழ்ப்பாணம். (சி/6031)

## நினைவு கூருகின்றோம்...

1993-2-16

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரச்சாவெய்திய-

★ இ. சாந்தகுமார் (பட்டிருப்பு - மட்டு.)

1986ஆம் ஆண்டு மட்டு - ஆயித்தியமலைப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

1987ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய-

சுனில் (மட்டக்களப்பு)

திருமலை - மூதூர், சம்பூர் பகுதியில், மாட்டுவண்டியில் வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

★ விக்ரம் (சிற்றம்பலம் வெனடிக்ற் - இருதயபுரம், மூதூர் - திருமலை)

கடற்புலிகளுக்கு எதிராக

## சிறிலங்காவும் இந்தியாவும் இணைந்து செயற்படுகிறதாம்

(கொழும்பு)

சிறிலங்காவும் இந்தியாவும் இணைந்து கடற்பரப்பில் கடற்புலிகளுக்கு எதிராக மும்முனைத் தாக்குதல் நடாத்தி வருவதாக கூட்டுப்படைத் தலைமையகம் செய்தி வெளியிட்டுள்ளது.

வேகமாகச் செல்கின்ற பீரங்கிப்படகுகள் இந்தியக் கரைவேரக் கப்பல்களுடன் இணைந்து இருபத்திநான்கு மணிநேரமும் ரோந்து புரிகின்றன.

அரபுக்கடலில் இருந்து அந்தமான் நிக்கோபார் தீவு உட்பட்ட பிரதேசங்களில் இந்தியக்கப்பல்கள் திரிகின்றன. இன்டர்போலின் உதவியுடன் விடுதலைப் புலிகள் பயன்படுத்துகின்ற கப்பல்கள் சர்வதேச நீர்ப்பரப்பில் வருகின்ற போது கண்டுபிடிக்கக் கூடியதாக இருக்கிறதாம்.

---

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு

**மகளிர் அபிவிருத்தி நிலையம்**

யாழ்/ கல்வித் திணைக்கள

மனைப்பொருளியற் பிரிவினருடன்

இணைந்து நடத்தும்

## போட்டி

விடயம்:- உள்ளூர் உணவுப் பொருள்களிலிருந்து சிறந்த புதிய உணவு வகைகள் தயாரித்தல்.

விதிமுறைகள்:- தயாரிக்கப்படும் உணவு,
1. உள்ளூர் பொருள்களைக் கொண்டதாகவும்,
2. போஷாக்கானதாகவும், அமைதல் வேண்டும்.

உணவு - வகைகள்:- விருந்தினர் உபசாரத்திற்குரியவை, சாதாரண மக்கள் பாவனைக்குரியவை, குழந்தைகள், முதியோர்கள், நோயாளர்க்குரியவை, விற்பனைக்குரியவை என்ற தரத்தில் அமையலாம்.

பங்கு பற்றுநர்:- பாடசாலை மாணவர்கள், மகளிர் குழுக்கள், தனியார் நிறுவனங்கள், தனிநபர்.
போட்டியில் ஆண்களும் பெண்களும் விண்ணப்பிக்கலாம்.
ஒருவர் / குழு எத்தனை வகை உணவுகளையும் தயாரிக்கலாம்.
பங்கு பற்றுபவர் 20. 02. 93 முன்னதாக விண்ணப்பிக்குக.

தயாரிக்கப்பட்ட உணவுவகைகள் 93 மார்ச்மாதம் 7ஆம் திகதி (07. 03 93) பார்வைக்கு வைக்கப்படும். சிறந்தவையென தெரிவுசெய்யப்படும் உணவு வகைகட்குத் தகுந்தபரிசில்கள்வழங்கப்படும்.

[இடம் பின்னர் அறிவிக்கப்படும்]

மகளிர் அபிவிருத்தி நிலையம், இயக்குநர்.
07 சயந்தசிறி வீதி [இரத்தினம் ஒழுங்கை],
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (4299)

---

படும்.

6. அங்கத்தவர் இடாப்பு 31 - 03 - 93 இல் மூடப்பட்டு அத்திகதியில் உள்ளவாறான வாக்காளர் பட்டியல்கள் கிளைரீதியாக தயாரிக்கப்படும் எனவும், இதனடிப்படையில் கிளைக்குழுத் தேர்தல்கள் நடாத்தப்படவுள்ளன என்பதையும் தெரிவிக்கின்றோம். இவ்விடயத்தில் சகல அங்கத்தவர்களையும் பூரண ஒத்துழைப்பினைத் தருமாறு அன்புடன் வேண்டுக் கொள்கின்றோம்.

| நிவாரணக் கிளையின் பெயர் | அங்கத்தவர் பட்டியல் தயாரிக்கப்பட்ட கிளைகளின் பெயரும் முகவரியும் |
|---|---|
| கிளை 1. பண்ணை வீதி, யாழ்ப்பாணம். | கிளை 1—ஊர்காவற்றுறை<br>கிளை 2— பருத்தியடைப்பு<br>கிளை 3— கரம்பொன்<br>கிளை 5— அம்பலப்புலம்<br>கிளை13— மெலிஞ்சிமுனை |
| கிளை 2. பண்ணை வீதி, யாழ்ப்பாணம். | கிளை 4— பாலக்காடு<br>கிளை6—நாரந்தனைவடக்கு<br>கிளை9—புளியங்கூடல்வடக்கு<br>கிளை12 — சரவணைமேற்கு |
| கிளை. 3 பண்ணை வீதி, யாழ்ப்பாணம். | கிளை 7 — தம்பாட்டி<br>கிளை 8—நாரந்தனைதெற்கு<br>கிளை10—புளியங்கூடல்தெற்கு<br>கிளை11—கருகில் |

தலைவர் செயலாளர்

---

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான

## கரபந்தாட்ட இறுதிப்போட்டியும் பரிசளிப்பு வைபவமும்

இறுதி ஆட்டம்: காட்லிக்கல்லூரி எதிர் நடேஸ்வராக் கல்லூரி

3ஆம் இடத்துக்கான ஆட்டம்: கனகரட்ணம் ம. வி. எதிர் மட்டுவில் ம.வி.

இடம்: சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானம்

காலம்: 17-02-93 புதன்கிழமை பி.ப 3-00 மணி

யாழ். மாவட்ட கரபந்தாட்ட சங்கம்
யாழ்ப்பாணம்.

(சி/6033)

---

செயலாளர்.

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை,
இல. 14, மணிக்கூட்டுவீதி,
யாழ்ப்பாணம். (சி/6031)

---

## நினைவு கூருகின்றோம்...

**1993-2-16**

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரச்சாவெய்திய-

★ இ. சாந்தகுமார் (பட்டிருப்பு - மட்டு.)

1986ஆம் ஆண்டு மட்டு - ஆயித்தியமலைப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

1987ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய-

சுனில் (மட்டக்களப்பு)

திருமலை - மூதூர் சம்பூர் பகுதியில், மாட்டுவண்டியில் வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

★ விக்ரம் (சிற்றம்பலம் வெளடிகற் - இருதயபுரம், மூதூர் - திருமலை)

★ தர்மலிங்கம் இராசா (இருதயபுரம், மூதூர்- திருமலை)

★ மோகன் (கிளிவெட்டி, மூதூர் - திருமலை)

1988ஆம் ஆண்டு கொழும்பு - பம்பலப்பிட்டி, மாணிக்கவிநாயகர் கோயிலில் சிவராத்திரிவிழாவுக்கு கூடியிருந்த அடியவர்கள் மத்தியில் குண்டு வெடித்ததில் கொல்லப்பட்ட 7 தமிழர்கள்.

1989ஆம் ஆண்டு மட்டு - மொறக்கொட்டாஞ்சேனைப் பகுதியிற் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 4 தமிழர்கள்.

1992ஆம் ஆண்டு திருமலை - சம்பூர், சீதனவெளிப் பகுதிகளைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 6 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/6025]

## யாழ். போதனா வைத்தியசாலை பரிசாரகர் பயிற்சிக்கு 26பேர் தெரிவு

யாழ் போதனா வைத்திய சாலையில் மிக விரைவில் சுமார் 26 ஆண், பெண் பரிசாரகர் தமது பயிற்சியைப் பெற உள்ளனர் என போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சென்ற வருடம் பயிற்சிக்கு விண்ணப்பித்தவர்களே இந்த நெறிக்கு அனுமதிக்கப்பட இருப்பதாக தெரிய வருகின்றது. தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் 114 பேர்கடமை புரியவேண்டும் என்றும் ஆனால்தற்போது கடமையாற்றுபவர்கள் 82 பேர் என்றும் சுமார் 40 வீதத்திற்கு மேல் பற்றாக்குறையாக இருப்பதாகவும் இவ்வாறு26 பேர் பயிற்சிக்குச் சென்றால் மேலும் பற்றாக்குறை அதிகரிக்கும் என்றும் இவ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன (நி)

## வருடாந்த பொதுக்கூட்டமும் பரிசளிப்பும்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாநகரசபை சன சமூகநிலையங்களின் சமாசத்தினரின்வருடாந்தப் பொதுக்கூட்டமும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நாவலர் கலாசாரமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வுகளில் சனசமூக நிலையங்களின் நிர்வாகப் பிரதிநிதிகளைத் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசத்தலைவர் கேட்டுள்ளார்.

## சனசமூக நிலையம் திறந்து வைப்பு

(வடமராட்சி)

பொலிகண்டி அம்பிகை சனசமூக நிலையம் கடந்த புதன் கிழமை மாலை 6 மணியளவில் ஆசிரியர் திரு. ஜெயச்சந்திரன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிலையத்தை வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா திறந்து வைத்தார். பருத்தித்துறை அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பைந்தமிழன் மங்கள விளக்கேற்றி வைத்தார்.

அடுத்து திரு. அரசண்ணா, பொலிகண்டி இ. த. க. பாடசாலை அதிபர் திருமதி ஸ்ரீ சிவராசா, திரு. ஜெயச்சந்திரன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். (யோ)

## விளையாட்டு போட்டிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையே வருடாவருடம் நடாத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள் தற்போது ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

## சிவராத்திரி விழா

ஊரெழு சக்திபுரம் சிவபூரணி காளியம்மன் தேவஸ்தானத்தில் மகா சிவராத்திரி விழாவை முன்னிட்டு சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிக் கல்லூரி அன்றைய தினம் நான்கு ஜாமப் பூஜை இடைவெளிகளுக்கிடையில் கலை நிகழ்ச்சிகளை நடாத்தவுள்ளது. இதன்போது பொது அறிவுப் போட்டி, சிறுவர் சோலை, சமயபுராண நாடகங்கள், நடனம் ஆகியனவும் இடம்பெறும்.

## புற்றுநோய் கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

வாய்ப் புற்றுநோய் சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று அண்மையில் யாழ் மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற்றது. இக் கருத்தரங்கில் வைத்திய கலாநிதி திரு. இ. தெய்வேந்திரம், பல்வைத்திய கலாநிதி திருமதி யோகவினாயகம் உட்பட பலர் கருத்துரைகள் வழங்கினார்கள். கருத்தரங்கின் இறுதியில் சுகாதார கல்வி மேற்பார்வை அத்தியட்சகர் திரு பி. ஜெகநாதன் தலைமையில் 'புற்றுநோய்' என்னும் கவியரங்கமும் இடம்பெற்றது.

## பணவீக்கம் அதிகரிப்பு

(கொழும்பு)

உலக அபிவிருத்தி அறிக்கை 1992இன்படி சிறிலங்காவில் பணவீக்கம் 11 வீதமாக அதிகரித்துள்ளது. இதேவேளை தெற்காசிய நாடுகளான பங்களாதேஷில் 9 வீதமும், நேபாளத்தில் 9 வீதமும், இந்தியாவில் 8 வீதமும், பாகிஸ்தானில் 7 வீதமும் பணவீக்கம் அதிகரித்துள்ளது.

தெற்காசிய நாடுகளில் சிறிலங்கா பணவீக்கத்தில் (விலைவாசிகள் ஏற்றம்) முன்னணியில் நிற்பது குறிப்பிடத்தக்கது.

## தற்கொலை

வாழ்க்கையில் விரக்தியுற்ற குடும்பஸ்தர் ஒருவர் அலரி விதையை உட்கொண்டு மரணமானார். வண்ணார்பண்ணை துரைராஜா வீதியில் வசித்து வந்த புங்குடுதீவு 4-ம் வட்டாரத்தைச் சேர்ந்த சி. இருளன் (வயது-53) என்ற எட்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு தன்னுயிரை மாய்த்துக் கொண்டவர் ஆவார். இவர் 13-ம் திகதி சனிக்கிழமை இரவு அலரி விதையை உட்கொண்டார் என கூறப்பட்டது.

---

# அரசாங்க அறிவித்தல்

சுகாதார சேவைகள் பிராந்திய திணைக்களம், யாழ்ப்பாணம்

## 1993 ஆம் ஆண்டிற்கான

# வழங்குநர்களைப் பதிவு செய்தல்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள நிறுவனங்கட்கு (வைத்தியசாலைகள் உட்பட) தேவையான பின்வரும் பொருட்களை வழங்கக்கூடியவர்களிடமிருந்து மறுபந்தியில் குறிப்பிடப்படுவோரிடமிருந்து பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. காகிதாதிகள்.
2. பாவனைப்பொருட்கள் (ஈர்க்கு விளக்குமாறு, தும்புத்தடி, சவர்க்கார வகைகள் )
3. வைத்தியசாலைப் பாவனைக்கான துணிவகைகள்,
4. மரத்தளபாடங்கள், மரத்தளபாட திருத்த வேலைகள்.
5. உருக்குத் தளபாடங்கள், உருக்குத் தளபாட திருத்த வேலைகள்.
6. பிளாஸ்டிக் பொருட்கள் (வாளி, குப்பைக்கூடை, குப்பை வாளி முதலியன.
7. இரும்பு, பித்தளை, கனஇரும்புப் பொருள்கள், ஆணைப்பூட்டுக்கள், வாளிவகைகள், குப்பைவாளி, மண்வெட்டி, அலவாங்கு, கத்தி, கோடரி முதலியவை.
8. மின்சார உபகரணங்கள், உதிரிப்பாகங்கள்.
9. வைத்தியசாலை உபகரணங்கள், (சேலைன் ஸ்ராண்ட், கட்டில்கள், சிறுகட்டில்கள், சத்திரசிகிச்சை உபகரண நிலைகள்)
10. கட்டிடத் திருத்தத்திற்குஅவசியமானபொருள்கள்
11. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் (டயர், ரியூப் உட்பட)

### பதிவு செய்யத் தகைமையானோர்

1. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்.
2. கூட்டுறவு மொத்த வியாபார ஸ்தாபனங்கள்.
3. பதிவு செய்யப்பட்ட வேறு கூட்டுறவுச் சங்கங்கள்.
4. கிராமோதய சபைகள்.
5. கிராம அபிவிருத்திச் சங்கங்கள்.
6. சனசமூக நிலையங்கள்.
7. வருமான வரி செலுத்தும் பிரசித்தி பெற்ற நிறுவனங்கள்.

### விண்ணப்பித்தல்

மேற்படி வழங்குநர்களாகப் பதிவு செய்து கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப்படிவத்தைக் கீழ்க்காணும் விலாசத்திலுள்ள எனது பணிமனையில் ரூபா 25/- பதிவுக் கட்டணமாகச் செலுத்திப் பெற்று 01-03-93 திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு முன் எனக்குக் கிடைக்கத் தக்கதாக விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்கள் பதிவுத் தபாலிலோ, அல்லது நேரடியாகவோ அனுப்பப்படலாம்.

1993 ஆண்டிற்கு தேவையான பொருள்கள் கொள்வனவு செய்யப்படும் பொழுது கேள்விகள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து மட்டும் கோரப்படும்.

**வைத்திய கலாநிதி பொ. இரத்தினசபாபதி**
பிராந்திய பணிப்பாளர்

சுகாதாரசேவைகள் பிராந்திய
பணிப்பாளர் பணிமனை
59, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்
9-02-1993 (கி/5987)

---

# தேவை

1. எழுதுவினைஞர்
2. சுருக்கெழுத்தாளர் (தமிழ்)

**தகைமைகள்:**

க. பொ. த. சாதாரணதர பரீட்சையில் 5 பாடங்களில் விசேட சித்தி

அல்லது

க. பொ. த. உயர்தர பரீட்சையில் சித்தி
வயது: 40 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல்

செயல் திறமையுடன் சிறப்பாகவும் விசுவாசமாகவும் கடமையாற்றக்கூடிய விண்ணப்பதாரருக்கு நல்லதொழில் முன்னேற்ற வாய்ப்புக்கள் உண்டு

சம்பளம் ; பேசித் தீர்மானிக்கப்படும்.

சிபாரிசு செய்யக்கூடிய உறவினரல்லாத இருவரின் பெயர் விபரங்களைக் குறிப்பிட்டு சொந்தக் கையெழுத்தில் தயாரித்த விண்ணப்பங்களை 21-2-93 பிற்பகல் 4.00 மணிக்கு முன்னதாக கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

| | |
|---|---|
| தலைவர்<br>யாழ் மாவட்ட பேக்கரி<br>உரிமையாளர் சங்கம்<br>மணியம்ஸ் கட்டிடம்,<br>யாழ்ப்பாணம். (4296) | ந. பாலவினாயகர்<br>செயலாளர்<br>யாழ், மாவட்ட<br>பேக்கரி உரிமையாளர்<br>சங்கம். |

---

## இளங்கலைஞர் மன்றத்தின்

# இசை விழா

வண். மேற்கு வைத்தியசாலை ஆதரவில்

## எட்டாம் நாள் நிகழ்ச்சிகள்

## 16-2-93 (செவ்வாய்) இன்று

### இடம்: மன்றக் கலாமண்டபம்

மாலை 4.00 — 5.00 மங்கள இசை

| நாதஸ்வரம்: | தவில்: |
|---|---|
| ரி சத்தியநாதன் | எஸ் பரந்தாமன் |
| ரி. செல்வநாதன் | எஸ். கண்ணன் |
| எஸ். கலியமூர்த்தி | எம். நாகேந்திரன் |
| கே. ராமதாஸ் | ரி. யோகநாதன் |

5.00 — 5.10 மிருதங்க இசை
அண்ணாமலை இசைமன்ற மாணவர்கள்

5.10 — 5.30 பாட்டு
சுவர்ணலக்ஷ்மி, விஜிதா, ஸ்ரீதேவி, சிவானுஜா, சறோஜினி
வயலின்: சுபத்திரா கணேசன்
மிருதங்கம்: எஸ் கமலதாஸன்

5.30 — 6.00 பாட்டு: எஸ். குலசிங்கம்
வயலின்: எஸ். கோபிதாஸ்
மிருதங்கம்: சதா வேல்மாறன்

6.00 — 6.45 இரு வயலினிசை
ஆர். எஸ் கேசவமூர்த்தி - எஸ். சுகன்யா
மிருதங்கம்: கே கண்ணதாஸன்
கடம்: சதா வேல்மாறன்

இரவு: 6.45 — 7.00 மங்கள விளக்கேற்றல்
திரு முத்துகணேஸ் (வர்த்தகர்)
திரு வி. சக்திவேல் (ஐயப்பன் புடைவை மாளிகை)
திரு ராகுலசூரியன்ஸ் (வர்த்தகர்)
தலைவர்: திரு பி. கனகசபாபதி (முன்னாள் தலைவர், நல்லூர் ப நோ. கூ. சங்கம்)
சிறப்பு விருந்தினர்: டாக்டர் ஆர் தெய்வேந்திரன் (சுகாதார வைத்தியர், யாழ். மாநகரசபை)

7.00 — 8.00 இசைக் கச்சேரி
பாட்டு: கே ராமநாதன்
வயலின்: எஸ். சர்வேஸ்வரசர்மா
மிருதங்கம்: எஸ். மகேந்திரன்

8.00 — 9.00 கெஞ்சிற் கச்சேரி
நாதஸ்வரம்: எஸ் எஸ். சிதம்பரநாதன்
வயலின்: ஆர். எஸ். கேசவமூர்த்தி
கெஞ்சிரா: எஸ் நாகராஜன்
மிருதங்கம்: கே. கண்ணதாஸன்
கடம்: சதா வேல்மாறன்

9.00 — 10.00 நாடகம்
கலைமகள் நாடகசபாவின் "இந்தமண் எங்களின் சொந்தமண்" புகழ் ஜி. சாந்தன், நடிகஜோதி செல்வம் ஆகியோர் வழங்கும் "மயானகாண்டம்" சரித்திர நாடகம்

வாழ்த்துவோர்:

## ரூபன் ஸ்ரோர்ஸ்

திருநெல்வேலி மார்க்கட், திருநெல்வேலி (சி-5965)

யாழ்ப்பாணம்

## நாட்சம்பள பணியாளருக்கு புதியசம்பளவிகிதம் அறிவிப்பு

கல்வி அலுவலகங்களிலும், பாடசாலைகளிலும் நாளாந்த கடமைபுரியும் நாட்சம்பளப் பணியாளர்களுக்கு 1993 ற்குரிய புதிய சம்பள மாற்றங்களின்படி அவர்களது சம்பளங்களை 1 1-93 தொடக்கம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யாழ். கல்வித் திணைக்களம் சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளது.

பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 37/92-ன் படி இந்த அதிகரித்தபடி பொது நிர்வாக அமைச்சின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. வழங்கப்பட வேண்டிய நாட்சம்பள விகிதம் அவர்களது பதவிகளின் அடிப்படையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ் அதிகரிப்பு 01-01-93 இலும் 1-7-93லும் அதிகரிக்கப்பட்டு தொடர்ந்து வழங்கப்படும். ஆனால் வாழ்க்கைச் செலவுபடி உச்சம் ரூபா 860ஐத் தாண்டக் கூடாது எனவும் இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (17)

## கெற்பலி பாடசாலைக்கு நிரந்தர அதிபர்

கெற்பலியில் இயங்கும் இடம்பெயர்ந்த மாணவர்களுக்கான பாடசாலைக்குரிய அதிபரையும், பகுதித்தலைவர்களையும் வேலணைக் கோட்டக் கல்வி அலுவலகம் அனுப்பி வைக்க உள்ளது. அதேசமயம் இப்பாடசாலைக்குத் தேவையான ஏனைய ஆசிரியர்களை சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலகம் கெற்பலிக்கு அனுப்ப, இங்கு ஏற்படும் வெற்றிடங்களுக்குரிய ஆசிரியர்களை வேலணைக் கோட்டக்கல்வி அலுவலகம் கைதடி, நாவற்குழிப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கும்.

மேலும் புங்குடுதீவுக் கொத்தணிப் பாடசாலையில் இருந்து கெற்பலிப் பாடசாலைக்குரிய அதிபரும், பகுதித்தலைவரும் அனுப்பி வைக்கப்பட உள்ளார்கள்.

மேற்கூறிய தீர்மானங்கள் அண்மையில் நடைபெற்ற வேலணைக்கோட்ட, கொத்தணி அதிபர் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (17)

## அரசைக் கவிழ்க்கச் சதி
### 15 வயது மாணவன் மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கைக் குடியரசை சட்ட விரோதமான முறையில் கவிழ்க்கச் சதி செய்தார் என அவசரகாலச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டு 15 வயது பாடசாலை மாணவனுக்கு எதிராக போடப்பட்ட வழக்கு விசாரணையை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மார்ச் 24 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

பட்டிருப்பைச் சேர்ந்த தேவராஜா ரமேஷ்காந்தி என்ற 15 வயது பாடசாலை மாணவன் வேறு இரு மாணவர்களுடன் சேர்ந்து சதி முயற்சியில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு குற்றப் பத்திரிகை கையளிக்கப்பட்டது.

---

ஸ்ரீ இரேணுக குருப்யோம் நம

## 46-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேஷ்டியும் மோட்ச தீபமும்

தோற்றம்: 11 - 10 - 1952



மறைவு: 02 - 01 - 1993

வீரசைவ குலத்தில் உதித்த

### திருமதி அன்னம்மா அருணாசலம்

2-01-1993 அன்று கொழும்பு செல்வதற்காக கிளாலிக் கடற்பரப்பின் ஊடாக ஆலங்கேணியை நோக்கிச் சென்ற பயணிகள் படகுகள் மீது சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கி வேட்டில் அகால மரணத்தை தழுவிக்கொண்டார். இவரின் ஆத்மா சாந்தியடைய கணவன், பிள்ளைகள், உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் எல்லாம் வல்ல சிவனை பிரார்த்திக்கின்றனர்.

தசமி திதியும் மூலநட்சத்திரமும் ஆங்கீரச வருசம் தமிழ் 5-ம் திகதி (16-02-93) இன்று செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் கிரியைகள் நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இங்ஙனம்

கணவர்:- செ. அருணாசலம்

பிள்ளைகள்:- அ. அற்புதராஜ்
அ. சிறி
அ. செல்வசிறி
அ. ஆனந்தரூபன்

கட்டி, பனிப்புலம்,
பண்டத்தரிப்பு.

[4293]

## 45-ம் நாள் நினைவஞ்சலி




| செல்வி நளினி தில்லையம்பலம் (ஆசிரியை பாலிநகர் மகாவித்தியாலயம் மல்லாவி) | திருமதி மகேஸ்வரி தில்லையம்பலம் |
|---|---|
| பிறப்பு:-12-05-1965 | பிறப்பு:-22-07-1944 |

இறப்பு:- 02-01-1993

அலைகடல் ஆழ்ந்த கிளாலிக் கடலிலே
அமைதியாக படகுதானும் சென்ற வேளையிலே
கயவரின் 'கன்போட்' கண் போட்டதோ
தண்ணீரும் உங்கள் உதிரத்தால் - செந்நீரானதோ
அன்னையின் மடியிலே உதிர்த்த உதயமாய்
உதிர்ந்தீர்களே இருவரும் கிளாலிக் கடலிலே!
துடிக்கின்றோம் நீங்கள் இல்லாத
இந்த நாட்களை நினைத்து.

5 ஆம் வாய்க்கால்,
கிளிநொச்சி.

உங்கள் பிரிவால் துயருறும்
உற்றார், உறவினர் நண்பர்கள்

(4292)

## அரசாங்க அறிவித்தல்

### சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்

### 1993ஆம் ஆண்டிற்கான திருத்துநர்களைப் பதிவு செய்தல்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள நிறுவனங்களுக்கு (வைத்தியசாலைகள் உட்பட) தேவையான பின்வரும் திருத்தல், செவ்வை பார்த்தல் வேலைகள் செய்யக்கூடியவர்களிடம் இருந்து பதிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) தட்டச்சு இயந்திரம்
(2) றோணியோ இயந்திரம்
(3) ஒளிப்படப்படியெடுகருவி

### விண்ணப்பித்தல்

மேற்படி திருத்துநர்களைப் பதிவு செய்து கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப் படிவத்தை கீழ்க்காணும் விலாசத்திலுள்ள எனது பணிமனையில் ரூபா 25/-பதிவுக் கட்டணமாகச்செலுத்திப் பெற்று 04-03 93 வியாழக்கிழமை காலை 11-00 மணிக்கு முன் எனக்குக் கிடைக்கத்தக்கதாக விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்கள் பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பப்படலாம். கடித உறையின் இடது பக்க மூலையில் இயந்திரங்கள் திருத்தலும், செவ்வை பார்த்தலும் எனப் போடப்படல் வேண்டும்.

1993ஆம் ஆண்டிற்கு தேவையான திருத்தல், செவ்வை பார்த்தல் வேலைகள் செய்யப்படும்போது கேள்விகள், பதிவு செய்யப்பட்ட திருத்துநர்களிடம் இருந்து மட்டும் கோரப்படும்.

வைத்திய கலாநிதி
பொ. இரத்தினசபாபதி
பிராந்திய பணிப்பாளர்,

சுகாதார சேவைகள்
பிராந்திய பணிப்பாளர்
பணிமனை,
விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்
11-02-93.

(சி-6008)

---

உ
சிவமயம்

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் ஆங்கீரச வருடம் தை மாதம் 4-ம் திகதி (17. 01. 93) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் சிவபதமடைந்த எமது தாயார்



அமரர் திருமதி

### நாகலிங்கம் அருளம்மா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் மாசி மாதம் 15ஆம் திகதி திங்கட்கிழமை காலை அந்தியேட்டிக் கிரியையும் செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் சபிண்டீகரண கிரியையும் (வீட்டுக்கிருத்தியம்) பிரார்த்தனையும், மதியபோசனமும் நடைபெறும். அத்தருணம் தங்களையும் குடும்பத்துடன் வருகை தந்து வைபவங்களில் கலந்து அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

மக்களின் குடும்பத்தினர்

நா. முத்துலிங்கம்
பராசக்தி - மனைவி
திருமாவளன் - சுவிற்சலாந்து
திருச்செல்வம் - சுவிஸ்
திருமாலினி
மதியழகன்
தனுஷா

யோகலிங்கம் - சுவிஸ்
மகிழரத்தினம் - மனைவி
ஜீவறஞ்ஜினி
மதனஜீவன்
ஜெகஜீவன்
ஜீவதரிசினி
றஜீவன்
சுகந்தஜீவன்

நா. சாந்தினிகேதன் - பிரான்ஸ்
புஸ்பராணி - மனைவி
சா. சாந்தசொறூபி
சா. கவிதா
சா சவிதா
சா. றூபன்
சா. விஜிதா

மகன் நா. இராசலிங்கம் - குருநாகல்
இ. இந்திரா - மனைவி
இ. ஜெகன்
இ. சுதா
இ பாமினி
இ. இராசரூபன்
இ. சுதன்

நா. சுந்தரலிங்கம் ஜேர்மனி
றதிவதனா - மனைவி
சுனிதா - மகள்
அனிதா - மகள்
றதீஸ் - மகன்

காலஞ்சென்ற நா. பஞ்சலிங்கம்
சிவக்கொழுந்து, காலஞ்சென்ற பொன்னம்மா
காலஞ்சென்ற இரத்தினம். பரமேஸ்வரி (லண்டன்)
சகோதரருமாவார்

இங்ஙனம்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இராமகிருஷ்ணபா சாலைலேன்,
கொக்குவில் கிழக்கு.

(4291)

சிந்தனைக்கு

ஓடம் தண்ணீரில் இருக்கலாம். ஆனால் தண்ணீர் ஓடத்தில் இருக்கக்கூடாது, அதுபோலவே உய்யும் வழிகாண விழைபவன் உலகத்தில் வாழலாம். ஆனால் உலகம் அவனகத்தே வாழக்கூடாது.

பகவான் இராமகிருஷ்ணர்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 16 - 02 - 1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2028
க. பொ. எஸ் - 05

# மேற்குலக நீதி போலித்தனமானது

"மேற்குலகம் செய்வது சரியானது என்றே நம்மில் பலர் நம்புகின்றனர். மேற்குலக நாட்டினர் தான் எமது இரட்சகர்கள் என்று நினைக்கின்றோம். கஷ்டங்கள், ஏற்படும்போது மேற்குலகம் எம்மைக் காப்பாற்றும் என்று எண்ணுகின்றோம். இது முட்டாள் தனமானது. தரம் குறைந்தவர்களாகவே மூன்றாம் உலகநாடுகளை மேற்கு நாடுகள் பார்க்கின்றன" இவ்வாறு அமெரிக்காவின் சர்வதேச விவகாரங்களின் நிபுணரான கறுப்பின வழக்கறிஞர் டாக்டர் காலித் அப்துல்லா தாலிக் அல் மன்சூர் கொழும்பில் ஒரு கருத்தரங்கில் பேசும்போது குறிப்பிட்டார்.

திரு.மன்சூரின் இக் கூற்று எழுந்தமானதோ அன்றிக் கற்பனையானதோ அல்ல. அனுபவ ரீதியாக வெளியிடப்பட்டதொன்றாகும். அமெரிக்க கறுப்பினத்தவரும் முஸ்லிமுமான மன்சூரின் கூற்றை விளக்க கடந்த வருடம் அமெரிக்காவில் இடம்பெற்ற இனக்கலவரமே போதுமானதாகும்.

அதாவது மேற்குலகம் வெள்ளையனை மட்டுமே மனிதராகக் கருதுகின்றது. வெள்ளையரின் அபிலாசைகள், தேவைகள் என்பனவற்றை நிறைவேற்றவே உலகம் படைக்கப்பட்டது என எண்ணுகின்றது. இதில் மூன்றாம் உலக நாடுகளின் மக்களும் வளங்களும் அடங்கும். இதன் காரணமாக வெள்ளையர் அல்லாதோரை மனிதராகவோ அன்றி அந்தஸ்து உரிமை என்பன உள்ளவராகவோ அவை கருதுவதில்லை.

மேற்குலகம் தமது தேவைகளை மூன்றாம் உலகில் இருந்து மலிவு விலையில் பெறுகின்றது. அதற்கேற்ப மூன்றாம் உலகில் தனது நடவடிக்கைகளை விஸ்தரிக்கின்றது. இதற்குத் தடையாகவுள்ள நாடுகளையும் தலைமையையும் கூட அவை அழித்துவிடவே பார்க்கின்றன. ஈராக் ஜனாதிபதி சதாம் உசையினை கொலைசெய்ய சி. ஐ. ஏ. பெருந்தொகைப் பணத்தை ஒதுக்கீடுசெய்து, அதனை வெளிப்படையாகவும் அறிவித்துள்ளது. இது அருவருக்கத்தக்க வெட்கக்கேடான செயல் என்று தெரிந்திருந்தும் அமெரிக்க அரசின் அங்கீகாரமும் கிடைத்துள்ளது.

ஆனால், இவ் வெட்கக்கேடான நடவடிக்கை குறித்து அமெரிக்கா வெட்கப்படவில்லை. பெருமை

## மாணவர்களுக்கு விசேட அடையாள அட்டை

(மட்டக்களப்பு)

மட்டுநகரில் தனியார் கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளதாக மதிய பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி மாணவர்களுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்குவது தொடர்பான உயர்மட்ட மகாநாடு ஒன்று நேற்று முன்தினம் மட்டக்களப்பில் நடைபெற்றது.

# இராஜாங்க அமைச்சர் ரணசிங்காவை சபாநாயகர் வெளியேற்றினார்

(கொழும்பு)

சிறிலங்கா பாராளுமன்றத்தில் அண்மையில் ஏற்பட்ட அமளிதுமளியினால் இராஜாங்க அமைச்சர் ஏ.ஜே. ரணசிங்க பாராளுமன்றத்தில் இருந்து சபாநாயகரினால் வெளியேற்றப்பட்டார்.

அண்மையில் எதிர்க்கட்சித் தலைவி அரசின் மீது சுமத்திய பத்திரிகையில் உரிமை மீறல் அறிக்கையை எதிர்த்து பிரதமர் டி. பி விஜேதுங்க அறிக்கை வாசிக்க எழுந்தபோது மேற்படி சம்பவம் நடைபெற்றது.

அமைச்சர் ஜோன் அமரதுங்காவுக்கும், எதிர்க்கட்சிப் பிரதம கொறடா ரிச்சட் பத்திரணவுக்கும் இடையே சூடான விவாதம் நடைபெற்றுக் கொண்டு இருக்கும்போது பாராளுமன்ற ஒழுங்கை மீறி நடந்த இராஜாங்க அமைச்சர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## திருக்கோணமலையில்
# முஸ்லிம்களின் மையவாடியில் சிங்களவர் குடியேற்றம்

(திருமலை)

திருக்கோணமலை நகரிலுள்ள முஸ்லிம் மையவாடி காணியில் குடியேறியோரை வெளியேற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என வட - கிழக்கு மாகாண ஆளுநர் நளின் செனவிரத்ன உறுதியளித்துள்ளார்.

முஸ்லிம் மக்களின் முறைப்பாட்டைத் தொடர்ந்து அமைச்சர்கள் வட - கிழக்கு மாகாண ஆளுநரிடம் இது குறித்த பேச்சுக்களை நடத்தியபோது அவர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதாக கூறினார்.

## ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில்
# மேலதிக மாணவர்களை சேர்க்க வைத்தியக் கல்லூரி

(கொழும்பு)

ஸ்ரீ ஜெயவர்த்தன புர போதனா வைத்தியசாலையில் மேலதிக மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் பொருட்டு ஒரு வைத்திய கல்லூரி மிக விரைவில் அமைய இருக்கின்றது.

இதில் 201 மாணவர்கள் தங்கி இருந்து கல்விபெறக் கூடிய வசதி இருக்கும் என்றும், தற்பொழுது இங்கு 31 மாணவர்கள் மட்டுமே கல்வி பெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இந்த ஆண்டில் யாணந்துறை களுபோவில மந்திரை ஆஸ்பத்திரிகள் போதனா வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்பட இருப்பதாக சுகாதார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# தமிழ்மொழி புறக்கணிப்பு இப்போதும் தொடர்கிறது

- டி. அய்யாத்துரை

(கொழும்பு)

தமிழ்மொழிக்கு தேசிய அந்தஸ்து என்றார் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்தனா அவர்கள். தமிழும் சிங்களமும் அரசகரும மொழி என்றார் இன்றைய ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அவர்கள். ஆனால் நடப்பது என்ன? சிங்கள மொழி மாத்திரமே அரசகரும மொழியாகவும் தமிழ் மொழி முற்றாகப் புறக்கணிக்கப்பட்டும் உள்ளது.

இவ்வாறு தொழிலாளர் தேசிய சங்கத்தலைவர் டி. அய்யாத்துரை தனது அறிக்கையில் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

மலையகத்தில் வாழும் தமிழ் மக்கள் தமது தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு அரசோடும் அரச திணைக்களங்களோடும் தொடர்பு கொள்ள வேண்டும். ஆனால் அரசும் அரச திணைக்களங்களும் சிங்களமொழியையே அரசகரும மொழியாகக்கொண்டு செயற்படுவதால், சிங்களம் தெரியாத இந்த மக்கள் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்கள் இதனால் பணம் கொடுத்து தரகர்கள் மூலம் தமது தேவைகளைப் பூர்த்தி செய்கிறார்கள்.

இன்று நாட்டில் பல்வேறு தொழில் நிறுவனங்களைத் திறந்து தொழில் வழங்கி வரும் ஜனாதிபதியின் சொற்பொழிவு கூட சிங்களத்தில் தான் இடம்பெறுகிறது. இந்தவகையில் தமிழ்மொழிக்கு தேசிய அந்தஸ்து என்று கூறிவருவது உண்மைக்கு முரணானது.

தேசிய மொழியாக, அரசகருமமொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தமிழை சகல மட்டத்திலும் அமுல்படுத்தி அதன் அந்தஸ்தை நிலைநாட்ட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# புதிய வேல் பிரதிஷ்டை

நல்லைக்கந்தனுக்குக் கொடிச்சீலை வழங்கி வரும் வேல் முருகன் ஆலயத்தில் தைப்பூசதினமான [6-2-93] சனிக்கிழமை மாணிக்கக்கல் பதித்த புதியவேல் ஒன்று பொதுமக்கள் வழிபாட்டுக்காக பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

## தலைமை வழக்கறிஞராக பெண் நியமனம்

(வாஷிங்டன்)

அமெரிக்க அதிபர் திரு. பில் கிளின்டன் மூலம் அமெரிக்காவின் தலைமைஅரசு வழக்கறிஞர் பதவிக்கு மியாமியைச் சேர்ந்த அரசு வக்கீல்ஸ்ரெனித்றெனோ நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நியமனத்தை அமெரிக்க பாராளுமன்றம் அங்கீகரிக்குமானால் ஸ்ரெனித்றெனோ அமெரிக்காவின் முதலாவது பெண் அட்டர்னி ஜெனரல் பதவியை ஏற்க இருப்பதாக தெரியவருகின்றது.

# சட்டம், ஜனநாயகத்திற்கு தமிழகத்தில் மதிப்பில்லை

- எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்

(டில்லி)

ஜனநாயக நெறிமுறைக்கும் சட்டத்தின் ஆட்சிக்கும் மதிப்பு அளிக்காமல் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவும், அவரது அரசாங்கமும் நடந்து வருவதாக தமிழக சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் கூறியுள்ளார். சென்னையில் அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கை ஒன்றில் மேலும் குறிப்பிடுகையில் தொலைக்காட்சி ஒளிபரப்புச் சம்பந்தமாக கொண்டு வரப்பட்ட தீர்மானம் ஏகமனதானது அல்ல என்றும், அங்கீகரிக்கப்பட்ட எதிர்க்கட்சியை விதிகளுக்குப் புறம்பாக வெளியேற்றிய பின்னர் நிறைவேற்றிய தீர்மானம் ஒருமனதாக அல்ல ஒரு தரப்பானது என்றும் தெரிவித்துள்ளார்.

எதிர்க் கட்சித் தலைவரான தம்மை இழிவுபடுத்தும் வகையில் உள்நோக்கம் கற்பித்து முதல்வருக்கு சம்பந்தமில்லாத வகையில் சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா வக்காலத்து வாங்கி வருவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## காங்கிரஸ் பார்வையாளர் குழு பம்பாய் போய்ச் சேர்ந்தது

## அ. தி. மு. க - காங்கிரஸ்

உலகம் படைக்கப்பட்டது என எண்ணுகின்றது. இதில் மூன்றாம் உலக நாடுகளின் மக்களும் வளங்களும் அடங்கும். இதன் காரணமாக வெள்ளையர் அல்லாதோரை மனிதராகவோ அன்றி அந்தஸ்து உரிமை என்பன உள்ளவராகவோ அவை கருதுவதில்லை.

மேற்குலகம் தமது தேவைகளை மூன்றாம் உலகில் இருந்து மலிவு விலையில் பெறுகின்றது. அதற்கேற்ப மூன்றாம் உலகில் தனது நடவடிக்கைகளை விஸ்தரிக்கின்றது. இதற்குத் தடையாகவுள்ள நாடுகளையும் தலைமையையும் கூட அவை அழித்துவிடவே பார்க்கின்றன. ஈராக் ஜனாதிபதி சதாம் உசையினை கொலைசெய்ய சி. ஐ. ஏ. பெருந்தொகைப் பணத்தை ஒதுக்கீடுசெய்து, அதனை வெளிப்படையாகவும் அறிவித்துள்ளது. இது அருவருக்கத்தக்க வெட்கக்கேடான செயல் என்று தெரிந்திருந்தும் அமெரிக்க அரசின் அங்கீகாரமும் கிடைத்துள்ளது.

ஆனால், இவ் வெட்கக்கேடான நடவடிக்கை குறித்து அமெரிக்கா வெட்கப்படவில்லை. பெருமையே பேசிக்கொள்கின்றது. அதாவது அமெரிக்க நீதி தமது நலனுக்காக எதையும் செய்ய தயாராக இருப்பதோடு, தமக்கு லாபமில்லாத ஒன்றையும் வேறு ஒருவரின் நலன் கருதி செய்யப்போவதில்லை என்பதும் முக்கியமானதாகும்.

மேற்குலக நாடுகள் மூன்றாம் உலக நாடுகளில் பலவழிகளில்பிரசன்னம் செய்கின்றன. உதவிவழங்கும் நிறுவனங்கள் என்றும், உதவி வழங்கும் நாடுகள் என்றும், மனிதநேய ஸ்தாபனங்கள் என்றும் நிவாரண அமைப்புக்கள் என்றும் அவை ஊடுருவல் செய்கின்றன. ஆனால், இவ்வாறு ஊடுருவல் செய்யும் அமைப்புக்களின் முக்கிய கடமை தமது நாட்டின் நலன்களைப் பராமரிப்பதேயாகும்,

இன்றைய நிலையில் ஐ நா. அமைப்பே மேற்குலகின், குறிப்பாக அமெரிக்காவின் ஒரு அமைப்பாக உருவாகியுள்ளது. இன்று அமெரிக்காவின் சம்மதம் எதுவுமின்றி ஐ. நா. ஒரு அடி தானும் எடுத்துவைக்கமுடியாத நிலைஉருவாகியுள்ளது. இதன் வெளிப்பாடே அமெரிக்காவின் விருப்பத்தை மீறி நாடுகடத்தப்பட்டுள்ள சுமார் 400 பாலஸ்தீனியர்விவகாரத்திலோ அன்றி சேபியாவின் விவகாரத்திலோ ஐ. நா. நிறைவேற்றும் தீர்மானம் எதையும் அமுல்படுத்தமுடியாது உள்ளது.

இந்நிலையில் மேற்குலகம் பற்றிய ஒரு மாயை மூன்றம் உலக நாடுகள் கொண்டிருப்பது மிகவும் ஆபத்தானது. மூன்றாம் உலகில் போரையும் பஞ்சத்தையும் இம் மேற்குலகம் தோற்றுவிக்கின்றன. நடத்துகின்றன. இதன்மூலம் இந்நாடுகளில் ஆதிக்கம் செலுத்த முற்படுகின்றன. மேற்குலகின் நீதியும், ஜனநாயகமும், மனித உரிமையும் தனியாக வெள்ளையர்களுக்கு மட்டுமே.

## தலைமை வழக்கறிஞராக பெண் நியமனம்

(வாஷிங்டன்)

அமெரிக்க அதிபர் திரு. பில் கிளின்டன் மூலம் அமெரிக்காவின் தலைமைஅரசு வழக்கறிஞர் பதவிக்கு மியாமியைச் சேர்ந்த அரசு வக்கீல்ஸ்செனித்றெனி நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நியமனத்தை அமெரிக்க பாராளுமன்றம் அங்கீகரிக்குமானால் ஸ்செனித்றெனி அமெரிக்காவின் முதலாவது பெண் அட்டர்னி ஜெனரல் பதவியை ஏற்க இருப்பதாக தெரியவருகின்றது.

# சட்டம், ஜனநாயகத்திற்கு தமிழகத்தில் மதிப்பில்லை

### - எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்

(டில்லி)

ஜனநாயக நெறிமுறைக்கும் சட்டத்தின் ஆட்சிக்கும் மதிப்பு அளிக்காமல் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவும், அவரது அரசாங்கமும் நடந்து வருவதாக தமிழக சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிர மணியம் கூறியுள்ளார். சென்னையில் அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கை ஒன்றில் மேலும் குறிப்பிடுகையில் தொலைக்காட்சி ஒளிபரப்புச் சம்பந்தமாக கொண்டு வரப்பட்ட தீர்மானம் ஏகமனதானது அல்ல என்றும், அங்கீகரிக்கப்பட்ட எதிர்க்கட்சியை விதிகளுக்குப் புறம்பாக வெளியேற்றிய பின்னர் நிறைவேற்றிய தீர்மானம் ஒருமனதாக அல்ல ஒரு தரப்பானது என்றும் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரான தம்மை இழிவுபடுத்தும் வகையில் உள்நோக்கம் கற்பித்து முதல்வருக்கு சம்பந்தமில்லாத வகையில் சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா வக்காலத்து வாங்கி வருவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## அ. தி. மு. க - காங்கிரஸ் கூட்டணி உறவு முறிவு

### - தமிழக அமைச்சர் அரங்கநாயகம்

(சென்னை)

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும் இடையிலான கூட்டணி உறவு முறிந்து போய்விட்டது என்று அமைச்சரும், அ. இ. அ. தி மு. க. தலைமை நிலைய செயலாளருமான செ. அரங்கநாயகம் கூறியுள்ளார்.

திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், கூட்டணி உறவு முறிந்து போய்விட்டது என்று ஆறு அமைச்சர்கள் கூறியிருப்பதற்கு முதல்வர் ஜெயலலிதா இன்னும் மறுப்பு எதுவும் தெரிவிக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை அ. தி. மு.க. பாரதிய ஜனதாவுடன் கூட்டணி அமைக்கும் என்று கோவிந்தாச்சாரியா கூறியிருப்பது பற்றிக் கேட்டபோது, அந்தக் கட்சிக்கு தமிழகத்தில் பலம் ஏதும் கிடையாது என்றும் எடுத்துக் கூறினார்.

## காங்கிரஸ் பார்வையாளர் குழு பம்பாய் போய்ச் சேர்ந்தது

(டில்லி)

மகாராஷ்ட்ரா மாநிலத்தில் அண்மையில் ஆறு அமைச்சர்கள் மாநில அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டதால் எழுந்திருக்கும் அரசியல் நெருக்கடி பற்றி ஆராய காங்கிரஸ் கட்சியின் பார்வையாளர் மூவர் பம்பாய் போய்ச் சேர்ந்துள்ளனர்.

இப் பார்வையாளர்களின்குழு நேற்று முன்தினம் சுதாகர் ராவ் நாயக்கை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

இதேவேளை எம். எல். ஏக்களும், எம். எல். சிக்களுமான 134பேர்சுதாகர்ராவ்நாயக்கை பதவி விலகக் கோரும் மகஜர் ஒன்றில் கையெழுத்திட்டிருப்பதாக அண்மையில் பதவிநீக்கம் செய்யப்பட்ட ஓர் அமைச்சர் கூறியுள்ளார்.

## தமிழகத்தில் திரையரங்க உரிமையாளர் பொலிசாரால் கைது

(சென்னை)

இராமேஸ்வரத்தில் இருக்கும் தொலைக் காட்சி அஞ்சல் கோபுரம் ஒன்றை வெடிவைத்து தகர்க்க முயன்றதாகக் குற்றம் சாட்டி அந் நகரிலுள்ள திரையரங்கு உரிமையாளர் ஒருவரைத் தமிழகப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

அவரிடமிருந்து சில ஜெலட்டின் குச்சிகளும், சில வெடிப் பொருள்களும் கைப்பற்றப் பட்டதாகவும் மேலும் கூறப்படுகின்றது.

## ஆர்ஜென்டீனாவிற்கும் அணுசக்தி தொழில்நுட்பம்

(புவனர்ஸ் அயர்ஸ்)

பலகமை கொண்டுள்ள மூன்றாவது மண்டல நாடுகளுக்கு ஏவுகணைகள் மற்றும் அணுசக்தி நுட்பங்கள் கிடைப்பதைத்தடுப்பதுடன், இரசாயன ஆயுதங்கள் மற்றும் கிருமி ஆயுதங்கள் தொழில் நுட்பம் கிடைப்பதைக் கட்டுப்படுத்த ஆர்ஜென்டீனா இணக்கம் தெரிவித்துள்ளது.

புவனர்ஸ் அயர்ஸில் கடந்த சனிக்கிழமை அமெரிக்காவுடன் கைசெழுத்திட்ட ஓர் உடன்படிக்கையின்படி ஆர்ஜென்டீனா நவீன கம்யூட்டர்கள் மற்றும் அணுசக்தி தொழில் நுட்பம் என்பவற்றையும் பெற்றுக்கொள்ள இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## பழங்கால நாணயங்கள் தமிழகத்தில் கண்டெடுப்பு

(சென்னை)

அமராவதி ஆற்றுப்படுகையில் ஏராளமான பழங்கால நாணயங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இதையடுத்து கரூர் நகரின் தொன்மை பற்றி மத்திய மாநில அரசுகளின் தொல் பொருள் ஆராய்ச்சித் துறைகள் முழுமையான ஆய்வுகளை நடத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடப் பட்டுள்ளது.

# தென் பகுதி அகதிகளுக்கு தொடர்ந்து உணவு கிடைக்கும்

(கொழும்பு

சிறிலங்காவின் தென்பகுதியில் கடந்த கால அசம்பாவிதங்களால் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ளோர் 60 ஆயிரம் பேர் எனக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்கள் அனைவரும் தென் பகுதியில் உள்ள 174 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இம் முகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்கான அவசர உதவிகளை ஐக்கியநாடு உதவி உணவுத் திட்டமே வழங்கி வந்தது இவர்கள் ஆறுமாத காலத்திற்கே இவ் உதவிகளை வழங்குவதாக முன்னர் அறிவித்திருந்தது. இவர்களது ஒப்பந்தகாலம் இன்றுடன் முடிவடைவதைத் தொடர்ந்து, தாம் தொடர்ந்தும் வழங்குவதாக இவ் அமைப்பு அறிவித்துள்ளது.

இவ் ஐக்கிய நாடு உதவி உணவுத்திட்டம் கொழும்பு, புத்தளம், குருநாகல், அனுராதபுரம், மாத்தளை, பொலநறுவை மாவட்டங்களில் அமைந்துள்ள முகாம்களுக்கே தமது உதவிகளை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

இவ் உதவிகள் சமூகசேவைகள் அமைச்சினூடாகவே இவ் அமைப்பு வழங்கி வருகிறது.

## சமூக வளர்ச்சிக்கு பல்கலை. உதவ வேண்டும்

### - துணைவேந்தர்

(கன்னாகம்)

சமூகத்திலுள்ள சகலருக்கும் வளர்ச்சியைத் தரும் விதத்தில் பல்கலைக் கழகங்கள் செயற்பட வேண்டும். இன்றைய நிலையில் மாணவர்கள், அரசாங்க வேலைகளுக்கு ஆசைப்பட்ட காலம் சென்று, சொந்தக் கால்களில் சுய முயற்சிகளில் ஈடுபட வேண்டும். இதுவே எமது தாயகத்தை வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும். இவ்வாறு நேற்று யாழ் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் ஆதரவில் நடைபெற்ற புகைப்படக்கலைஅடிப்படைப் பயிற்சி நெறியில், பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கி உரையாற்றுகையில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் அ. துரைராஜா தெரிவித்தார்.

அங்கு, அவர் மேலும் உரையாற்றுகையில், மேற்கத்தைய நாடுகளில் பகலிலே தொழிலாளராக பணிபுரியும் பலர், மாலையானதும் தம் மேற்படிப்பை தொடருவதற்கான மாணவர்களாக பல்கலைக்கழகங்கள் வாய்ப்பை அளிக்கின்றன ஏறத்தாழ, ஒரு பல்கலைக்கழகத்திலேயே எழுபதினாயிரம் மாணவர்கள் வரை கல்வி கற்க அங்கு சந்தர்ப்பங்கள் அளிக்கப்படுகின்றன. இந்நிலையினை யாழ். வளாகத்திலும் உருவாக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேற்படி பயிற்சிநெறி, இலங்கையில், யாழ். பல்கலைக் கழகத்திலே ஆரம்பிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. முதலாவது தொகுதியில் எழுநூற்றைம்பது மாணவர்கள் விண்ணப்பித்து நூறு பேர் தெரிவு செய்யப்பட்டு பயிற்சி வழங்கப்பட்டுள்ளனர்.

நேற்றைய மேற்படி சான்றிதழ் வழங்கலில், கலைப் பீடாதிபதி திரு. பாலசுந்தரம் பிள்ளை புறநிலைப் படிப்புகள் இணைப்பாளர் திரு. இரா. சிவச்சந்திரன் உட்பட விரிவுரையாளர்களும் சமூகமளித்திருந்தனர். பயிற்சிக்கான பரிசோதனைத் தளங்களை கலைஸி புகைப்பட சேவை நிறுவனமும் மழலை புகைப்பட நிறுவனமும் ஒழுங்கு செய்திருந்தன. [11] [09]

## மகாசிவராத்திரி

நல்லூர் ஸ்ரீசட்டநாதர் ஆலயத்தில் மகாசிவராத்திரி தினத்தை முன்னிட்டு எதிர்வரும் வெள்ளிக்கிழமை இரவு 7.00 மணிக்கு சங்காபிஷேகமும் இரவு 12.00 மணிக்கு லிங்கோற்பவ அபிஷேகமும் 4 ஜாம விசேட பூசைகளும், விசேட பஜனைகளும், சமய சொற்பொழிவுகளும் இடம் பெற ஏற்பாடாகி உள்ளது.

## தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனம் உதயம்

பொருளாதாரத் தடையினால் பின்தங்கியுள்ள கைத்தொழில்களின் வளர்ச்சிக்கான சகல நடவடிக்கைகளையும் ஒன்றிணைக்கும் முகமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக கைத்தொழில் பகுதியினர் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தை உருவாக்கினர். இதன் பணியகம் கடந்த 8 ஆம் திகதி திங்கட்கிழமை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

யாழ். மாவட்ட அரசியல் நிர்வாக உதவிப் பொறுப்பாளர் திரு. தங்கன் அவர்கள் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா அவர்கள் பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து வைத்தார். தொழிலதிபர் கலாநிதி கனகராசா மங்கள விளக்கேற்ற யாழ் மாவட்டத் தளபதி அன்பு அவர்கள் நிறுவன பணியகத்தை வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

இயங்கிக் கொண்டிருக்கும் தொழிற்சாலைகளின் சார்பில் மின்னைத் தொழிலதிபர் கனகராசாவும், தொழிற்சாலை அபிவிருத்தியின் கீழ் வடிவமைக்கும் யந்திர நிறுவனங்களின் சார்பில் திரு பூரணச்சந்திரனும் (புறோ மோட்டர்ஸ் கம்பனி) முன்னோடி நடவடிக்கையாகத் தமது ஸ்தாபனங்களைப் பதிவு செய்தனர். விழாவில் கலந்து கொண்ட பேராசிரியர்கள், தொழிலதிபர்கள், அரசு-அரச சார்பற்ற அதிகாரிகள், வங்கி முகாமையாளர்கள், பொது மக்கள் ஆகியோரிடமிருந்து இந்த நிறுவன மேம்பாட்டிற்கான கருத்துக்கள் பெறப்பட்டன. இந் நிறுவனத்தின் ஆரம்பம் கைத்தொழில் மேம்பாட்டிற்கு உறுதியான அடித்தளமாக அமையும்

## ஆலயங்களில் இருக்கும் படையினரை விலக்குக

### - இந்து சமயப் பேரவை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

போரினால் சேதமடைந்த இந்துக் கோவில்களைப் புனரமைக்கும் படியும் இந்துக்களின் வரலாற்றுப் பெருமை மிக்க திருக்கேதீஸ்வரம், கீரிமலை நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஆகிய புனித ஆலயங்களில் அமைக்கப்பட்டிருக்கும் இராணுவ முகாம்களை அகற்றி அவற்றில் நித்திய பூசைகள் நிகழ இடமளிக்கும்படியும் இந்து சமயப் பேரவையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேலும் பேரவை விடுத்த வேண்டுகோளை அரசாங்கமும் ஜனாதிபதியும் புறக்கணித்து வருவதை வன்மையாக கண்டிப்பதாகவும், இது குறித்து ஜனாதிபதியுடன் நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளது.

திருக்கோணமலையில் இந்துக் கோவில்களுக்கு சொந்தமான காணிகளை அரசாங்கம் பறிமுதல் செய்து குடியேற்றங்களை நிறுவுவதை இப்பேரவை வன்மையாகக் கண்டிப்பதுடன், இலங்கை அரசியல் அமைப்பில் உறுதி செய்யப்பட்டுள்ள மத சுதந்திரத்தையும், உரிமையையும் பறிக்கும் இவ் அத்து மீறலை உடனடியாகக் கைவிடும்படி ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் இப்பேரவை கேட்டுள்ளதுடன்,

யாழ்ப்பாணக் கடலேரியில் இடம்பெற்ற கொலைப் படுகொலைகளை வன்மையாகக் கண்டிப்பதுடன் குடாநாட்டுக்கான பொருளாதாரத்தடைகளை நீக்கி பொதுமக்கள் சுதந்திரமாக பிரயாணம் செய்வதையும் மக்களின் உயிர் வாழ்வதற்கான சமூக ரீதியான சுதந்திரத்தையும் உறுதிப்படுத்துமாறு ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் கேட்டுள்ளது.

## பாராளுமன்ற தூதுக்குழு பாகிஸ்தான் செல்கிறது

சபாநாயகர் தலைமையிலான இலங்கைப் பாராளுமன்ற தூதுக்குழு ஒன்று பாகிஸ்தானுக்கு விஜயம் செய்துள்ளது.

இக்குழு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்... விமானம் மூலம் பாகிஸ்தான் சென்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## குளிர்த்தி விழா

சிதம்பரேணி கலைநகர் முத்துமாரிஅம்மன் கோவிலின்...

## கருத்தரங்கு

யாழ்ப்பாண பல்கலைக் கழக தமிழ்த்துறையினால் நாளை புதன்கிழமை பி.ப 2.0 மணிக்கு "ஈழத்து நாட்டார் கூத்து இலக்கியங்களும், காத்தவராயன் கூத்து இலக்கியமும்" என்ற பொருள் பற்றிய கருத்தரங்கு நடாத்தப் படவுள்ளது பல்கலைக்கழக அரும்பொருளக அறையில் நடைபெறும் மேற்படி கருத்தரங்கிற்கு தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமை தாங்குவார். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் திரு. பொ. அருந்தவநாதன் கருத்துரை வழங்குவார்.

ஆர்வலர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப் படுகின்றனர்.

## இன்று வெளியாகும்?

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகவெளிவாரிப் பரீட்சைப் பெறுபேறுகள் இன்று மாலை வெளியாகலாமென பல்கலைக் கழக வட்டாரங்கள் மூலம் நம்பகரமாகத் தெரியவருகிறது.

வணிகமுதற்தேர்வு, கலை முதற்தேர்வு பரீட்சைகளுக்கு தோற்றிய 1990-91 கல்வியாண்டு மாணவர்களுக்கே முடிவுகள் வெளியாகவுள்ளது குறிப்பிடத்தக்கது (05)

## அமெரிக்க

...ரிகையாளர் ஆபத்தான நிலையிலும் உயிர் அச்சுறுத்தல் மத்தியிலும் கடமை புரிவதாகவும் எனவே அவர்களுக்கு சுதந்திரமாக செயற்பட அனுமதிக்குமாறு அந்த குழு...

## வீரவணக்க கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் வட்டத்தில் 2ஆம்மாதம் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 7.30 மணிக்கு விடத்தற்பளையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## சைக்கிள் திருட்டு

(மல்லாகம்)

கடந்த சனி இரவு இணுவில் பிரதேசத்தில் அடுத்தடுத்த வீடுகளில் மூன்று சைக்கிள்கள் களவாடப்பட்டுள்ளது. வீட்டை அடுத்துள்ள கராஜினுள் வைத்துப் பூட்டப்பட்டிருந்த ஒரு வீட்டின் இரண்டு சைக்கிள்கள் கராஜ் உடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ளன. இதுபற்றி காவல் துறையினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (9)

## விலை உயர்வு

(யாழ்ப்பாணம்)

பால்மா வகைகள் தட்டுப்பாடின்றி யாழ்நகரில் கிடைக்கக்கூடியதாக இருந்தாலும் பாவனையாளர்கள் கூடுதலான விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கின்றது.

## கிராம

...காக வடக்கு- கிழக்குமாகாண சபையின் உள்ளூராட்சி ஆணையாளர் திரு. சபாபதிப்பிள்ளை அவர்கள் 'குமண' கப்பல் மூலம் திருக்கோணமலையில் இருந்து இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

இந்நேர்முகத் தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவோருக்கு ஒருமாதம் பயிற்சி வழங்கப்பட்டு அதன் பின் அவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படுமென செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (சி)

## கூட்டுறவு

...பனவு விரைவில் வழங்கப்படவுள்ளதாக தெரிய வருகின்றது மாதம் ஒன்றிற்கு 500/- ரூபா வீதம் ஆறு மாதங்களுக்கும் 3000/ ரூபா சம்பந்தப்பட்ட பணியாளர் ஒவ்வொருவருக்கும் விரைவில் வழங்கப்படும் என சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (22)

## அடிப்படை

...தாக்கல் செய்த மனுவையடுத்து விசாரணைகளுக்கு பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டார்.

எனினும் தம்மை சித்திரவதை செய்த அதே பொலிசாரையே மீண்டும் புலனாய்வுக்கு பொலிஸ்மா அதிபர்...

சரியோவான் முதலுதவிச் சங்கமும் படையும்
வடமராட்சிப் பிரதேசம்

"முதலுதவி நிதி" அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

சீட்டிழுப்பின் போது 1 முதல் 5வரையில் தெரிவு செய்யப்பட்ட இலக்கங்கள் வருமாறு 1 ஆவது A 3688, 2 ஆவது B 1791, 3ஆவது A 1654, 4 ஆவது B 1712, 5 ஆவது 2891 என்பன.

அங்கு. அவர் மேலும் உரையாற்றுகையில், மேற்கத்தைய நாடுகளில் பகலிலே தொழிலாளராக பணிபுரியும் பலர், மாலையானதும் தம் மேற்படிப்பை தொடருவதற்கான மாணவர்களாக பல்கலைக் கழகங்கள் வாய்ப்பை அளிக்கின்றன ஏறத்தாழ, ஒரு பல்கலைக் கழகத்திலேயே எழுபதினாயிரம் மாணவர்கள்

பட்டதுபற்றி திரு. [illegible] பிள்ளை புறநிலைப் படிப்புகள் இணைப்பாளர் திரு. இரா. சிவச்சந்திரன் உட்பட விரிவுரையாளர்களும் சமூக மளித்திருந்தனர். பயிற்சிக்கான பரிசோதனைத் தளங்களை கக்ஸி புகைப்பட சேவை நிறுவனமும் மழனை புகைப்பட நிறுவனமும் ஒழுங்கு செய்திருந்தன. [11] [09]

புனித ஆலயங்களில் அமைக்கப்பட்டிருக்கும் இராணுவ முகாம்களை அகற்றி அவற்றில் நித்திய பூசைகள் நிகழ இடமளிக்கும்படியும் இந்து சமயப் பேரவையின் அறிக்கையில தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேலும் பேரவை விடுத்த வேண்டுகோளை அரசாங்கமும் ஜனாதிபதியும் புறக்கணித்து வருவதை வன்மையாக கண்டிப்பதாகவும், இது குறித்து ஜனாதிபதியுடன் நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளது.

திருக்கோணமலையில் இந்துக் கோவில்களுக்கு சொந்த

பறிக்கும் இவ் இத்து மறவை உடனடியாகக் கைவிடும்படி ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் இப்பேரவை கேட்டுள்ளதுடன்,

யாழ்ப்பாணக் கடலேரியில் இடம்பெற்ற [illegible] படுகொலைகளை வன்மையாகக் கண்டிப்பதுடன் குடாநாட்டுக்கான பொருளாதாரத் தடைகளை நீக்கி பொதுமக்கள் சுதந்திரமாக பிரயாணம் செய்வதையும் மக்களின் உயிர் வாழ்வதற்கான சட்டரீதியான சுதந்திரத்தையும் உறுதிப்படுத்துமாறு ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் கேட்டுள்ளது.

...நாதன் கருத்துரை வழங்குவார்.

ஆர்வலர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப் படுகின்றனர்.

## இன்று வெளியாகும்?

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகவெளிவாரிப் பரீட்சைப் பெறுபேறுகள் இன்று மாலை வெளியாகலாமென பல்கலைக் கழக வட்டாரங்கள் மூலம் நம்பகரமாகத் தெரியவருகிறது.

வணிகமுதற்தேர்வு, கலை முதற்தேர்வு பரீட்சைகளுக்கு தோற்றிய 1990 - 91 கல்வியாண்டு மாணவர்களுக்கே முடிவுகள் வெளியாகவுள்ளது குறிப்பிடத்தக்கது (05)

...மூலம் தேர்ந்தெடுக்கப்படுவோருக்கு ஒருமாதம் பயிற்சி வழங்கப்பட்டு அதன் பின் அவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படுமென செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (சி)

## கூட்டுறவு

[illegible] விரைவில் வழங்கப்படவுள்ளதாக தெரிய வருகின்றது மாதம் ஒன்றிற்கு 500/- ரூபா வீதம் ஆறு மாதங்களுக்கும் 3000/ ரூபா சம்பந்தப்பட்ட பணியாளர் ஒவ்வொருவருக்கும் விரைவில் வழங்கப்படும் என சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (22)

## அடிப்படை

தாக்கல் செய்த மனுவையடுத்து விசாரணைகளுக்கு பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டார்.

எனினும் தம்மை சித்திரவதை செய்த அதே பொலிசாரையே மீண்டும் புலனாய்வுக்கு பொலிஸ்மா அதிபர் நியமித்ததாகவும் திரு விஜயமுனி குற்றம்சுமத்தியிருந்தார்

இந்த வழக்கு தொடர்பாக விசாரணை நடத்திய உயர் நீதிமன்றம் விஜயமுனிக்கு நட்டஈடு 35 000 ரூபா வழங்கப்பட வேண்டுமெனத் தீர்ப்புரை விடுத்துள்ளது. அத்துடன் சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் உயர்நீதிமன்றம் பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தியுள்ளது.

பரியோவான் முதலுதவிச்

சங்கமும் படையும்

வடமராட்சிப் பிரதேசம்

## "முதலுதவி நிதி" அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

சீட்டிழுப்பின் போது 1 முதல் 5வரையில் தெரிவு செய்யப்பட்ட இலக்கங்கள் வருமாறு 1 ஆவது A 3688, 2 ஆவது B 1791, 3ஆவது A 1654, 4 ஆவது B 1712, 5 ஆவது 2891 என்பன.

ஆறுதல் பரிசில்களின் இலக்கங்கள் முறையே பின்வருமாறு. B 3684, B 4750, A 1741, A 1640, A 1909 A 2861 ஆகும்.

மேற்படி பரிசில்களுக்குரியவர்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (19 2-93) அன்று கிராமக் கோட்டிற்கு அருகாமையில் உள்ள எமது தலைமைக் காரியாலயத்தில் உரியபற்றுச் சீட்டுக்களுடன் சமுகம்தந்து காலை8 30-10 00 மணி வரைக்குள் பரிசில்களை பெற்றுச் செல்லவும்.

(சி-6027)

## மரண அறிவித்தல்

### திரு. சுந்தர் ஐயாத்துரை

(காலஞ்சென்ற முன்னாள் தபால் நிலைய ஊழியர் சிவகுமாரின் தந்தையும், பித்தளை வார்ப்புத் தொழிலாளியும்)

நல்லூர் இல. 94 நாயன்மார் வீதியைச் சேர்ந்த சுந்தர் ஐயாத்துரை அவர்கள் 15 02 - 93 இல் சிவபதமடைந்து விட்டார். அன்னாரின் பூதவுடல் 16-02-93 இன்று பிற்பகல் 3 00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக் கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

94, நாயன்மார் வீதி,
நல்லூர்.

குடும்பத்தினர்

[4300]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 61 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1993 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

## பாராளுமன்ற தூதுக்குழு பாகிஸ்தான் செல்கிறது

சபாநாயகர் தலைமையிலான இலங்கைப் பாராளுமன்ற தூதுக்குழு ஒன்று பாகிஸ்தானுக்கு விஜயம் செய்துள்ளது.

இக்குழு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் இரவு கொழும்பிலிருந்து விமானம் மூலம் பாகிஸ்தான் சென்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## 7 வது

மக்களிடம் சென்றடைவதில் நிதர்சனம் கடந்த ஆறு ஆண்டுகளாக அக்கறை செலுத்தி வருகிறது.

## கிட்டு

"நான் கிட்டுவை ஆழமாக நேசித்தேன். தம்பியாக, தளபதியாக, எனது சுமைகளைத் தாங்கும் இலட்சியத் தோழனாக நான் அவனை நேசித்தேன் இது சாதாரண மனித பாசத்திற்கு அப்பாலானது. ஒரே இலட்சியப்பற்றுணர்வில், ஒன்றித்த போராட்ட வாழ்வில் நாம் பகிர்ந்து கொண்ட அனுபவத்தில் ஒருவரை ஒருவர் ஆழமாக இனம் கண்டு புரிந்துணர்வில், வேரூன்றி வளர்ந்த நேசம் அது.

"கிட்டு ஒரு தனிமனித சரித்திரம். நீண்ட, ஓய்வில்லாத புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றில்ஒரு காலத்தின் பதிவு.

வங்கக் கடலில் பூகம்பமாக அவனது ஆன்மா பிளந்தது. அதன் அதிர்வலையால் எமது தேசமே விழித்துக்கொண்டது.

கிட்டு, நீ சாவினை ஒரு புதிய மூச்சாகப் பிறந்திருக்கிறாய்.

## குளிர்த்தி விழா

சித்தன்கேணி கலைநகர் முத்துமாரிஅம்மன் கோவிலின் வருடாந்தக் குளிர்த்தி விழா எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவிருப்பதாக தேவஸ்தான நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்

## வடபகுதிக்கு

படும் எனவும் மெரினாவ் கப்பலில் 1700 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களை யாழ். செயலகத்திற்கு எடுத்துச் செல்லும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர ஆனோரி எனும் கப்பலில் மன்னாருக்கான உணவுப் பொருள்கள் மற்றும் நிவாரணப் பொருள்கள் அனுப்பிவைப்பதற்கான ஒழுங்குகள் மேற் கொள்ளப்படுகின்றனவாம்.

இதேவேளை எம். பி ஞானரோமா என்ற கப்பல் திருக்கோணமலைக்கும், காங்கேசன் துறைக்கும் இடையில் திங்கள், வியாழனில் பயணிகள் கப்பல் சேவை நடைபெறுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கிளிநொச்சிக்கு தேவையான உணவுப்பொருள்கள் 25 லொறிகளில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் அனுப்பிவைப்பதற்கான ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாகவும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

## அமெரிக்க

நிலையாளர் ஆபத்தான நிலையிலும் உயிர் அச்சுறுத்தல் மத்தியிலும் கடமை புரிவதாகவும் எனவே அவர்களுக்கு சுதந்திரமாக செயல்பட அனுமதிக்குமாறு அந்த குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. "கடந்த சில தினங்களாக பத்திரிகையாளர் கெடுபிடிக்கு உள்ளாகியுள்ளனர். இதனால் எழுந்துள்ள நிலைமை தொடர்பாக இந்த நலன் பேணும் குழு அவதானித்து வருகிறது. சுதந்திர பத்திரிகை நிறுவனங்களின் சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கை இது" என நியூயோர்க் பத்திரிகையாளர் நலன் பேணும் குழு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது

## உள வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 15-02-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8300

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27-9404, 28-9633, 26-6026, 24-4265, 42-3368, 24-5137, 26-525, 22-9005, 26-3294, 24 4457, 26-1735, 26-4376, 22-4766, 26-9703, 26-8052, 42-0488, 28-8951.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

2[illegible]-1928, 41-1665, 27-9416, 41-9791, 41-9211, 41-6784, 24-9489, 22-2250, 24-5886, 27-9090, 24-336, 28-6020, 24-6489, 28-0428, 28-3528, 24-5774, 41-7563, 41-9530, 24-8364, 26-9552, 28-9527, 26-1658, 42-6452, 28-1311.